

# சொக்கறி ஒரு சிங்களக் கூத்து

காரை செ. சுந்தரம்பிள்ளை

சிங்கள மக்களிடையே காணப்படும் கிராமியக் கலைகளுள் ஒன்றாக 'சொக்கறி' என்னும் கூத்து விளங்குகிறது. இது பெரும்பாலும் கண்டியையும் அதனை அடுத்த மலைப்பகுதிகளிலும், வன்னிப் பகுதிகளிலுமே சிங்கள மக்களால் ஆடப்பட்டு வருகின்றது. கரையோரப் பகுதிகளில் இந்நாடகம் ஆடப்படுவதில்லை. எம். டி. ராகவன் என்னும் ஆராய்ச்சியாளர் இக்கூத்து வடிவம் 'கின்னரய' என்றழைக்கப்படும் ஒரு சாதியினராலேயே பெரும்பாலும் ஆடப்படுகிறதென்று கூறுவர். இச்சாதி மக்கள் பாய் இழைத்தல் முக்கிய அம்சமாகக் கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

திரு. சி மௌனகுரு தமது கட்டுரை ஒன்றில் இந்நாடகத்துக்கும் மட்டக்களப்பில் காணப்படும் மகுடிக் கூத்துக்கும் உள்ள ஒற்றுமையைக் குறிப்பிட்டுள்ளார். பொருள், மேடை அமைப்பு, நாடகத்தை அரங்குக்கு அளிக்கும் பாணி, இரசிகர்களுக்கும் நடிகர்களுக்குமிடையே காணப்படும் ஊடாட்டம் என்பனவற்றிடையே காணப்படும் ஒற்றுமையை இவர் காட்ட முனைந்துள்ளார். இதேபோல சொக்கறியில் காணப்படும் ஆடல் அமைப்பிற் சிலவும், இசை அமைப்பிற் சிலவும் வடபகுதியில் காணப்படும் காத்தவராயன் கூத்துடன் ஒத்திருக்கக் காணலாம். ஏனைய சிங்களக் கூத்து வடிவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சொக்கறி தமிழ்க் கலைகளுக்கே பெரும்பாலும் கடன்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

1976 ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்களுடன் 'சொக்கறி' என்னும் கூத்தை முதன் முதலில் 'தம்புள்ள' என்னும் கிராமத்திற் பார்க்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. பின்னர் கேகாலையில் அண்மையில் தெகியோவிட்டயிலும் இக் கூத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது. மூன்று இடங்களிலும் ஆடப்பட்ட கூத்துக்களிடையே பெரும்பாலும் ஒற்றுமை காணப்பட்ட போதும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளும் இருந்தமை ஆராய்ச்சிக்குரியதாகும்.

காசியைச் சேர்ந்த குருஹாமி என்றழைக்கப்படும் ஆண்டி குரு அழகில்லாதவன். இவனை மணக்க எந்தப் பெண்ணும் முன்வரவில்லை. இதனால் கவலை கொண்ட குருஹாமி பத்தினித் தெய்வத்தை உள்ளம் உருக வேண்டுகின்றான். மகிழ்ச்சியடைந்த பத்தினித் தெய்வம் இவனது தலையில் ஓர் முடியை அணிய குருஹாமி பேரழகனாகின்றான். இவனுடைய அழகுக்கு ஏற்றவளாக சொக்கறி அம்மா என்னும் பெண் இவனை மணம் முடிக்கிறான். இவர்களுக்கு 'பச்சிமீரா' அல்லது 'பறையா' என்று அழைக்கப்படும் ஓர் அடிமை பணிபுரிந்து வருகிறான்.

நிரந்தரமான தொழில் இல்லாத காரணத்தினால், மூவரும் இலங்கைக்கு வரத் தீர்மானிக்கின்றனர். இலங்கைக்கு வந்ததும் சிவனொளிபாதமலைக்குச் சென்று வணங்கிய பின்னர் தம்பாவிட்ட என்னும் கிராமத்தில் குடியமர்கின்றனர். இங்கே இவர்கள் வசித்து வரும்பொழுது குருஹாமியை நாய் ஒன்று கடித்து விடுகிறது. அவ்வூரில் பிரபலம் வாய்ந்த நாட்டு வைத்தியர் ஒருவர் இவனுக்கு வைத்தியம் செய்ய அழைக்கப்படுகிறார். வைத்தியருக்கும் சொக்கறிக்கும் இரகசிய நட்பு உண்டாகிறது. ஒருநாள் இருவருமே யாருக்கும் தெரியாமல் ஊரைவிட்டு ஓடிவிடுகின்றனர். கவலையடைந்த குருஹாமி ஊரூராக அலைந்து இறுதியில் கதிர்காமம் முருகனை வேண்டுகிறான். முருகன் சொக்கறி இருக்கும் இடத்தைக் கூற, குருஹாமி அங்கே சென்றபோது சொக்கரி ஒரு குழந்தையுடன் இருக்கக் காணப்படுகிறாள். குருஹாமியைக் கண்ட சொக்கரி, தனது தவறை உணர்ந்து மன்னிப்புக் கோர அவன் அவளையும் குழந்தையையும் அழைத்து வருகின்றான். இதுவே 'சொக்கறி' யின் முக்கியமான கதையம்சமாகும். இருந்த போதும் இடத்துக்கிடம் கதையமைப்பில் சிறு சிறு மாற்றங்கள் காணப்படுகின்றன.

குருஹாமிக்கு நாய் கடிப்பதற்குப் பதிலாகப் பாம்பு தீண்டுவதாக சில கூத்துக்களில் காட்டப்படுவதாக ஒரு சிலர் கூறினர். குழந்தை வரம் வேண்டியே இருவரும் சிவனொளிபாதமலைக்குச் செல்வதாகச் சில இடங்களில் காட்டப்படுகிறது. குருஹாமி வயது சென்ற ஒருவனாகவும், சொக்கறி இளமையும் வனப்பும் மிக்கவளாகவும் இருந்த காரணத்தினால், பச்சிமீரா என்னும் அடிமையுடனும் இரகசிய நட்புக் கொண்டிருந்தாள் என்றும் சில கூத்துக்களில் காட்டப்படுகிறது. வைத்தியருக்கும் சொக்கறிக்கும் இடையில் நட்பு உருவாகுவதைக் கண்ட பச்சிமீரா சொக்கறியை அடிப்பதையும், வைத்தியரை மிரட்டுவதையும், ஆபாசமான வார்த்தைகளால் ஏசுவதையும் கேகாலையில் ஆடிய கூத்தில் காணக்கூடியதாக இருந்தது; ஓர் அடிமை எஜமானியை அடிக்கிறானென்றால், அதற்கு இந்த இரகசிய நட்பே காரணமாகும்.

தாய்மையுற்றிருந்த சொக்கறிக்கு வைத்தியம் செய்ய வந்தபோதே சொக்கறி வைத்தியருடன் கூடிச் சென்றதாகச் சில இடங்களில் காட்டப்படுகிறது. பெரும்பாலும் வைத்தியரின் தொடர்பினாலேயே குழந்தை பிறப்பதாகக் காட்டப்படுகிறது.

சொக்கறியில் வரும் முக்கியமான பாத்திரங்களாவன; குருஹாமி, சொக்கறி அம்மா, 'பறையா' எனப்படும் பச்சிமீரா, வைத்தியர், பறையாவின் மனைவி காளியம்மா, வைத்திய

ரின் மருமகன் 'சொத்தான்'. பாம்பாட்டி செட்டி (வியாபாரி) கபுறுளை (மதகுரு). ஆசாரி (தச்சன்). சில இடங்களில் வைத்தியருக்கு இராமன் எனப்படும் மகனும் இருப்பதாகக் காட்டப்படுகிறது. வைத்தியர், பறையா, சொத்தான ஆகிய பாத்திரங்கள் பொய் முகங்களுடனேயே (முகமூடி) தோன்றுவது வழக்கம். சொக்கறி அம்மாவும் சில சமயங்களில் பொய் முகத்துடன் தோன்றுவதுண்டு. பறையா அணியும் பொய்முகம் மரத்தினாலும், ஏனையோர் அணிவது காட்போட் மட்டையினாலும் செய்யப்படும். வைத்தியர் வேட்டி அல்லது சாரமும் கோட்டும் அணிவர். தாடி, மீசையுள்ள பொய்முகமே அணிவர். தலையணை ஒன்றை முதுகிற் கட்டி ஒரு கூனலன் போலக் காட்டுவர். சொத்தானவின் வயிற்றில் தலையணை ஒன்றைக் கட்டி பெரிய வயிறு (வண்டி) உடையவனாகக் காட்டுவர். சொக்கறியும், காளியம்மாவும் கண்டிய பாணியில் சாறி அணிவர். பெரும்பாலான பாத்திரங்களைக் கோமாளித்தனமுடையன வாகக் காட்டுதலே வழக்கம்.

இக் கூத்தில் வைத்தியரும், பறையாவும் இடைக்கிடை தமிழிலேயே உரையாடுவதை அவதானிக்கலாம். மேலும் சொக்கறி அம்மா, காளியம்மா, இராமன் ஆகிய பாத்திரங்கள் தமிழ்த் தொடர்புடையன என்பதும் குறிப்பிடத்தக்கது. சொக்கறி என்னும் பதம் மராட்டியிலும் ஹிந்துஸ்தானியிலும் 'பெண்' என்னும் பொருளையுடையது என்பர். எம். டி. ராகவன் பச்சிமீரா என்னும் 'பறையா' பறையர் சாதியைச் சார்ந்தவன் என்பர். டாக்டர் ஈ. ஆர். சரத் சந்திரா இவற்றை வைத்து நோக்கும் பொழுது 'சொக்கறி'யின் மூலம் எதுவென ஆராய சிங்களக் கிராமியக் கலைகளை ஆராய வேண்டிய அவசியமில்லை என்பது புலனாகிறது. டாக்டர் சரத்சந்திரா அவர்களும் 'சொக்கறி' தமிழ்க் கூத்துக்களை ஒத்திருக்கின்றது என்று கூறுவதும் குறிப்பிடத் தக்கது.

சிங்கள வருடப்பிறப்பினையொட்டியே சொக்கறி ஆடப்படுகிறது. தொடர்ந்து ஏழு தடவைகள் ஆடிய பின்னர் இக் கூத்து நிறுத்தப்படுகிறது. பின்னர் அடுத்த வருடப்பிறப்பின் பின்னரே இதனை ஆடுவது வழக்கம். சொக்கறி ஆடப்படும் அரங்கம் மிகவும் எளிமையானது. சூடடிக்கும் களமே சொக்கறி ஆடப்படும் களமாக அமைகிறது. வட்டக்களரி அமைப்பில் நடுவே கூத்து நடைபெறப், பார்வையாளர்கள் நான்கு புறமும் இருந்து பார்த்து இரசிப்பர். மேடையோ அல்லது திரைகளோ கிடையாது. அரங்கின் ஓரத்தில் தென்னங் குருத்தில் செய்யப்பட்டு கூடு ஒன்று பத்தினி வணக்கத்துக்கும், கதிர்காம முருகன் வணக்கத்துக்கும் பயன்படுத்தப் படுகிறது. முன்னர் பந்தம், பெற்றோமக்ஸ், லாம்பு என்பவற்றைப் பயன் படுத்திய இவர்கள் இப்பொழுது மின்விளக்கையும் பயன்படுத்துகிறார்கள். ஒலிபெருக்கியை நானறிந்தவரையில் இவர்கள் இது வரை பயன்படுத்தவில்லை கண்டிப் பகுதியில் 'கடபேரி' எனப்படும் மத்தளமும், தாளமுமே முக்கிய வாத்தியங்களாகப் பயன் படுத்தப் படுகின்றன. வன்னிப் பகுதியில் உடுக்கு மத்தளத்துக்குப் பதிலாகப் பயன்படுத்தப் படுகிறது, முழு இரவும் நடைபெறும் இக் கூத்தைப் பார்வையிடும் இரசிகர்களுக்கு அவ்வூர் மக்கள் தேநீர் சிற்றுண்டி முதலியனவற்றை வழங்கி மகிழ்விப்பது அவர்களுடைய விருந்தோம்பும்

பண்பைப் புலப்படுத்துகிறது. சில ஊர்களில் சாராயப் பிரியர்களுக்குச் சாராயமும் வழங்கப்படுவதாக அறிகின்றேன்.

முக்கிய பாத்திரம் ஏற்கும் குருஹாமி பத்தினித் தெய்வத்தையும், கதிர்காம முருகனையும் வணங்குவதுடன், கூத்து ஆரம்பமாகும் பெரும்பாலும் 'சொக்கறி' பத்தினி (கண்ணகி) வழிபாட்டுடனேயே தொடர்புடையது. புத்தமத வழிபாடு இக்கூத்தில் அருகியே காணப்படுகிறது. குருஹாமி சிவனொளி பாதமலைக்குச் சென்று புத்த தேவனின் புனித பாதத்தை வணங்குவதாக அண்மைக் காலத்திலேயே புகுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. எனினும் சிற்சில இடங்களில் சிங்களக் கலைகளாகிய 'கோலம்', 'தொவில்' முதலியனவற்றில் காணப்படும் கரண அம்சங்களையும் சொக்கறியில் இடைக்கிடையே புகுத்திவிட்டார்கள் எனத் தெரிகிறது.

தமிழ்க் கூத்துக்களில் காணப்படும் ஏட்டண்ணாவியார், மத்தள அண்ணாவியார் ஆகியோரைச் சொக்கறியிலும் சந்திக்கலாம். நடிகர் அரங்கில் தோன்றுவதற்கு முன்னர் அவர்கள் ஏட்டண்ணாவியாரால் (பொத்தகுரு) அறிமுகம் செய்யப்படுவர். உதாரணமாக பறையாவை பின்வருமாறு அறிமுகம் செய்வர்.

இதோ உங்கள் முன் நடனமிடப் போகும் பறையாவை அறிமுகம் செய்கிறேன். அவன் தன்னை முழுவதும் பார்க்கிறான். எங்கும் சுற்றி நோட்டம் விடுகிறான், தேவையின்றிப் பிதற்றுகிறான். சொக்கறி மீதும் அடிக்கடி கண்ணைச் செலுத்துகிறான். இவ்வாறு அறிமுகம் செய்து ஏட்டண்ணாவியார் (பொத்தகுரு) பாட, மத்தள அண்ணாவியார் வாசிக்க பாடற்குழு (கோரஸ்) தாளம் போட்டு இசைக்க அதற்கேற்ப பாத்திரங்கள் அரங்கில் ஆடுவது வழக்கம். இதன் பின்னர் பாத்திரங்கள் தங்களுக்குள் உரையாடத் தொடங்கும். தனிப் பாத்திரமாக இருந்தால் மத்தள அண்ணாவியாருடன் அல்லது ஏட்டண்ணாவியாருடன் உரையாடுதல் வழக்கம்.

சொக்கறியில் 'போலச் செய்தல்' அல்லது ஊமம் முக்கிய இடம் பெறுகிறது. குருஹாமியும், சொக்கறியும், பறையாவும் மரத்தைத் தறித்தல், ஆசாரியுடன் சேர்ந்து தோணி செய்தல், பின்னர் கடலைக் கடத்தல், வீடு கட்டுதல், வீட்டை மெழுகுதல், பாய் இழைத்தல் என்பன யாவும் போலச் செய்தல் மூலமே நடித்துக் காட்டப்படுகிறது போலச் செய்தலைப் புதிதளித்தல் என்று கூறுவாருமுளர்.

தோணியில் ஏறிக் கடலைத் தாண்டும் போது பாடும் பாடல் இசை காத்தவராயன் கூத்தில் இடம் பெறும் இசையை ஒத்திருக்கின்றது. சவளைப் பிடித்துத் தோணியை ஓட்டுவதாகக் குருஹாமியும் பறையாவும் 'போலச் செய்தல்' மூலம் காட்டுவது தத்ரூபமாக அமைந்துள்ளது. சில கூத்துக்களில் சொக்கறியும் இணைந்து தோணியை ஓட்டுவதுண்டு. தமிழ்க் கூத்துக்களில் குதிரைச் சவாரி செய்தல், கப்பல் ஓட்டுதல் என்பன எவ்வாறு மத்தளத்துக்கேற்ப ஆடிக் காட்டப் படுகின்றனவோ அவ்வாறே இக்காட்சியும் நடித்துக் காட்டப்படுகிறது.

சொக்கறி குழந்தையைத் தாலாட்டுவதும் தமிழ் இசையையே நினைவுபடுத்துகிறது. சொக்கறி அம்மா சபையில் உள்ள குழந்தை ஒன்றை எடுத்

துத் தாலாட்டுவதும், குருஹாமியின் வைத்தியச் செலவுக்கெனச் சபையோரிடம் சென்று பறையாவும், சொக்கறி அம்மாவும் பணம் சேர்ப்பதும் இக்கூத்தின் சிறப்பம்சங்களாகும்.

இக்கூத்தில் பாய் இழைத்தல் முக்கிய இடம் பெறுகிறது. இது ஒரு குறியீட்டை அடிப்படையாகவுடையது. குருஹாமி சொக்கறியை வைத்தியரிடமிருந்து பிரித்து அழைத்து வருகிறான். நன்றாகக் களைத்துவிட்ட குருஹாமி உறங்குவதற்குப் பாய் கொண்டு வரும்படி கேட்கிறான். அவன் பாய் நைந்து விட்டதாகக் கூற இருவரும் போய் புற்களை வெட்டி வந்து பாயிழைத்த பின்னர் துயில்கின்றனர். இதில் கூறவந்த கருத்து மிகவும் முக்கியமானது. ஏற்கனவே நைந்து போன உறவைப் புதுப்பிப்பதே இதன் உட்பொருளாகும். பாய் இழைக்கும் போது புற்கள் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகப் பின்னப்படும். அதுபோல குடும்ப வாழ்விலும் கணவன், மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இக்கூத்து முழுவதும் கிண்டலும் கேலியும் நிறைந்து காணப்படும். சில இடங்களில் அளவுக்கு மிஞ்சிய விரசம் காணப்படும். பறையா என்னும் பாத்திரம் வார்த்தைகளால் மட்டுமன்றி செய்கைகளாலும் ஆபாசமாக நடந்து கொள்வதை அவதானிக்கலாம். ஆயினும் பார்வையாளர்கள் அவற்றை ஏற்று ரசிப்பதையே எல்லா இடங்களிலும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சமுதாயத்தில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதையும் இக்கூத்து அடிப்படையாகக் கொண்டது. உதாரணமாக வயது சென்ற ஒருவனை மணப்பதினால் வரும் ஒழுக்கப் பிசகு சுட்டிக் காட்டப்படுகிறது. வைத்தியர் அழகில்லாதவன். ஆனால் பணக்காரன். சொக்கறி மிகுந்த அழகி. இருந்தபோதும் வைத்தியருடன் ஓடிவிடுவது ஆராய்ச்சிக்குரியது. மேலும் அடிமையாகிய பறையா சொக்கறியுடன் நடந்து கொள்ளும் விதமும் உளவியல் ரீதியாக நோக்குதற்குரியது.

ஒரு கிராமிய யதார்த்த வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவதாக இக்கூத்து அமைகிறது. குருஹாமி அரிசி வாங்கச் செல்வது. மொழி தெரியாமல் தடுமாறுவது, தண்ணீர் கொண்டு வர பறையா போவது. இடையில் அவன் செய்யும் அங்க சேஷ்டைகள், வைத்தியர் குட்டி போட்ட நாய் போலச் சொக்கறியைச் சுற்றி வருவது, இதைக் கண்ணுற்ற பறையா மிரட்டுவது, வைத்தியரின் மருமகன் சொத்தான், மகன் இராமன் ஆகியோர் நக்கல் செய்வது, இவற்றையும் பொருட்படுத்தாது வைத்தியர் சொக்கறியின் மையலில் மூழ்குவது என்பன யாவும் இன்றைய சமுதாயத்தில் காணப்படும் அம்சங்களே. சுருக்கமாகக் கூறுவதானால் சொக்கறி சிங்களச் சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்ட முயற்சிக்கும் ஓர் கலை வடிவமேயான போதும், இது எல்லாச் சமுதாயத்துக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது என்று கூறலாம்.

'தம்புள்ள' வில் ஆடப்பட்ட சொக்கறியில் கண்டிய நடனம் கலந்துவிட்டதாகவும், சொக்கறியில் காணப்படும் கூத்து மரபை அது மானப்படுத்தி விட்டதாகவும், எனது ஆசிரியரும் மிகச் சிறந்த சிங்களக் கலைஞருமாகிய தம்மயா கொட என்பவர் குறிப்பிட்டார். கேகாலையில் ஆடப்

பட்ட சொக்கறியில் இக்கால இசை சில இடம் பெற்று விட்டது என எனது சிங்கள நண்பர் ஒருவர் வருத்தம் தெரிவித்தார்.

காத்தவராயர் கூத்தில் ஆடப்படும் இலகுவான ஆட்ட மரபே சொக்கறியில் சில பாத்திரங்களால் கைடாளப்படுகிறது. சொக்கறி மீண்டும் குருஹாமியிடம் வந்ததும் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு பாடும் சோகமயமான பாடல்கள் சில காத்தவராயர் கூத்து மெட்டில் அமைந்தனவாகும்.

உதாரணமாக;-

தாவிபறி போகுதடி
பார்வதியே பெண்ணே —
உந்தன்
தலைவன் இங்கே
மாளுரேண்டி
பார்வதியே பெண்ணே.

என்ற பாடலுக்குரிய மெட்டில் அவை பாடப்படும். அம் மெட்டுப் பின்வருமாறு:-

தான னன தான தன்னே
தான னன ருனே— தன்ன
தான னன தான தன்னே
தானனன தானே.

'சொக்கறி' என்னும் கூத்தில் காணப்படும் பின்வரும் அம்சங்கள் இக் கூத்துக்கும் தமிழ்க் கலைகளுக்குமிடையில் உள்ள தொடர்பை வலியுறுத்துவன.

1. ஆண்டி, குரு, சொக்கறி அம்மா, காளியம்மா, இராமன், பறையா என்னும் பெயர்கள்.

2. வைத்தியர், பறையா ஆகிய பாத்திரங்கள் தமிழில் உரையாடுதல்.

3. பத்தினித் தெய்வ வழிபாடு, முருக வழிபாடு என்பனவே முக்கியத்துவம் பெறுதல்.

4. தமிழ் இசை மரபும், ஆடல் மரபும் சிறப்பிடம் பெறுதல்.

5. குருஹாமியின் உடை இப்பொழுது கண்டிய மரபில் அமைந்தாலும் அவன் மார்பில் பூணூல் விளங்குவது.

6. வைத்தியர் கூறும் மூலிகைகள் அனைத்தும் தமிழ்ப் பரியாரிமார் பயன்படுத்துபவை.

7. முழுக்க முழுக்கச் சமயத் தொடர்புடையன சிங்களக் கிராமியக் கலைகள். ஆனால் சொக்கறியில் அது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. (இப்பொழுது தான் சில இடைச் செருகல்களாகப் புகுந்து விட்டன எனச் சொல்லப்படுகிறது.

சொக்கறி என்னும் கூத்தை முழுமையாக ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஓர் உண்மை புலப்படும். சிங்களக் கலைகளின் ஊற்றுக் கால்களாக விளங்குபவை பெரும்பாலும் தமிழ்க் கலைகளே. காலப்போக்கில் அவை தமிழ்க் கலைகளிலிருந்து விடுபட்டுக் கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப மாறுபடினும் அவற்றின் அடிநாதமாக நின்று விளங்கும் ஒரு சில அம்சங்கள் தமிழ்க் கலை அம்சங்களே என்பது தெளிவாகும்.

●